**O.S.No. 8/2020**

**Dated 26.03.2025**

**வா.சா. 1 மாதவன்**

**பிரதிவாதி குறுக்கு விசாரணை**

என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சமபங்கு கோரி தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சமபங்கில் எனக்கு வரவேண்டி சொத்து எவ்வளவு என்றால் 67 செண்ட் ஆகும். எனது தகப்பனார் பெயர் பி.எம்.எஸ்.எஸ் ராமசாமி நாடார் ஆகும். மேற்படி ராமசாமி நாடாரின் தந்தை பெயர் பி எம் எஸ் சண்முகசுந்தரநாடார் ஆகும். மேற்படி சண்முகசுந்தர நாடாருக்கு ஆண் வாரிசு 6 நபர்கள்– ராமசாமி நாடார், சிவசுப்பிரமணிய நாடார், நாகராஜன் நாடார், ராகவ நாடார், ஜெயசீலன் நாடார், பார்த்தசாரதி நாடார் ஆகியோர்கள் ஆவார்கள். பெண் வாரிசுகள் 6 நபர்கள் உள்ளனர். மேற்படி பெண் வாரிசுகளுக்கு தாவா சொத்திற்கும் எந்தவித சம்பந்தமும், பாகமும் கிடையாது என எனது தாத்தா இருக்கும் போதே பேசி முடிக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். மேற்படி எனது தாத்தா சண்முகசுந்தர நாடாரும் மற்ற ஆண் வாரிசுகளுக்கும் இடையில் பாகப்பிரிவினை நடைபெற்றதா என்றால் பிரித்துகொண்டோம். மேற்படி பாகப்பிரிவினையில் பாகப்பிரிவினை ஆவணம் 03.10.1958 ல் ஆவணம் பிறப்பித்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி 03.10.1958 பாகப்பிரிவினை ஆவணத்தின் அசல் ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் என்னிடம் இருக்கிறது. தாவா 2 ம் தபசில் சொத்தான சர்வே எண். 275/2 அந்த சொத்தும், மேற்கண்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் படி பிரித்து கொண்டசொத்து என்றால் சரிதான். அதனால் வழக்கிற்கு மேற்கண்ட பாகப்பிரிவினை ஆவணத்தையும் எவ்வாறு சொத்து பிரிக்கப்பட்டது என்பதையும் பார்க்க வேண்டும் என்றால் சரிதான். மேற்படி 03.10.1958 பாகப்பிரிவினை ஆவணத்தில் தான் மொத்தம் இருந்த 16 ஏக்கர் 56 செண்ட் நிலத்தையும், எனது தகப்பனாருக்கும், பிரதிவாதிகளின் தகப்பனாருக்கும் இடையில் பிரிவினை செய்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் 2 ம் தபசில் சொத்தாக காண்பிக்கப்பட்ட சொத்து தான் எனதுதகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். இவ்வழக்கின் தாவா 2 ம் தபசில் சொத்தை 2 ம் தபசில் 1 வது அயிட்டமாக பாகப்பிரிவினை ஆவணத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றாலும்,

மேற்படி சொத்தை பழைய சர்வே எண்ணாண 929 மற்றும் 917 என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொன்ன சர்வே எண். 929 மற்றும் 917 உள்ள மொத்த சொத்தான 16 ஏக்கர் 56 செண்டில் எங்களுக்கு 6 ஏக்கர் 56 செண்ட்டும் கிணற்றில் விகித்தாச்சாரமாக தண்ணீர் பாய்ச்ச வேண்டும் என ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன 16 ஏக்கர் 56 செண்டில் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட 6 ஏக்கர் 56 செண்ட் தவிர 10 ஏக்கர் மற்றும் தண்ணீர் பாசானம் முறை ஆகியவை பிரதிவாதிகளின் தகப்பனார் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன 10 ஏக்கர் சொத்து தான் மேற்படி பாக ஆவணத்தில் 3 வது தபசில் 1 அயிட்டமாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொன்ன பாகப்பிரிவினை ஆவணத்தின் படி பிரதிவாதிகள் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட 10 ஏக்கர் சொத்து பழைய சர்வே எண். 929 மற்றும் 917, தற்போதைய புதிய சர்வே எண். 275/2 இன்றளவும் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான். புல எண். 275/3 என்னுடைய தனிப்பட்ட அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான். பழைய பாக ஆவணத்தில் கண்ட தபசில் சொத்தான பிரதிவாதிக்கு விடப்பட்ட 10 ஏக்கரில் நிலத்தில் இருந்து தான் நான் தற்போது இந்த வழக்கில் 65 செண்ட் நிலம் கோருகிறேன். வழக்கின் தாவா 1ம் தபசில் சொத்தின் மொத்தம் 6 அயிட்ட சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் தபசில் 1ம் அயிட்ட சொத்து 20.01.1960 தேதிய கிரைய ஆவணம் மூலமாக எனது தாயரான 1ம் வாதியாலும், 1ம் பிரதிவாதியாலும் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். 1ம் தபசில் 1ம் அயிட்ட சொத்தையும், 26.09.1960 தேதிய 1ம் தபசில் 2 வது அயிட்ட சொத்தை 1ம் வாதியும், 1ம் பிரதிவாதியும் சேர்ந்து கிரையம் பெற்றனர் என்றால் சரிதான். மேற்படி 2 சொத்தையும் தான் 1ம் வாதியும், 1ம் பிரதிவாதியும் வா.சா.ஆ.4 ஆவணம் மூலமாக எனது தகப்பனாருக்கும், 2ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கும் நன்கொடையாக கொடுத்துள்ளரனர் என்றால் சரிதான். வா.சா.ஆ,1,2,4 சொத்துக்கள் பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் பிரதிவாதிகளின் தகப்பனார் காலத்தில் இருந்து நிர்வாகம் செய்து வருகின்றனர். தற்பொழுது 1,2 அயிட்ட சொத்துக்கள், 4,6 அயிட்ட சொத்துக்கள் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது. 3 வது அயிட்ட சொத்து பிரதிவாதியின் தகப்பனார்

இறந்த பிறகு என்னுடைய அனுபவத்தில் இருந்து வருகிறது. 3, 4, மற்றும் 5 சொத்துக்களை 1ம் பிரதிவாதியும், 1ம் வாதியும் சேர்ந்து வாங்கிய ஆவணங்களை தான் வா.சா–ஆ.3,5,6 ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.1ம் தபசில் 5வது அயிட்ட சொத்தான சர்வே எண். 296/1 அந்த சொத்தை வேறு மூன்றாம் நபருக்கு கிரையம் கொடுக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன ஆவணத்தின் நகல் தான் வா.சா–ஆ.8 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இருவரும் சேர்ந்து தான் கிரையம்கொடுத்தோம். மேற்படி சொன்ன சொத்து எங்கள் குடும்பதை விட்டு போய் 50 ஆண்டுகளாகிறது என்றால் சரிதான். கடந்த 50 ஆண்டுகளாக கிரையம் பெற்ற நபர்கள் தான் அனுபவம் செய்து வருகின்றனர் என்றால் அதைகிரையம் கொடுத்துவிட்டோம் யார் அனுபவம்செய்கிறார்கள் என்று தெரியாது. வா.சா.ஆ.8 சொத்தையும் 2ம் வாதி தான் தற்போது அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. மேற்கண்ட சங்கதியை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன சங்கதியை வேண்டுமென்றே மறைத்து அந்த சொத்தை வழக்கில் சேர்த்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. தாவா 1ம் தபசில் 1,2 அயிட்ட சொத்திற்கு எவ்வளவு தொகை கொடுத்து கிரையம் பெற்றார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மற்ற கிரையங்களுக்கு யார் யார் எவ்வளவு தொகை கொடுத்து பெறப்பட்டது என்ற விவரம் குறித்து எனக்கு தெரியாது. கிரையங்களுக்கு சமமாக பணம் கொடுக்கப்பட்டது என்ற விவரம் எனது தகப்பனார் கூறி எனக்கு தெரியும். நீங்கள் கூறுவது போல் சமமான பணம் இருவரும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. 1ம் தபசிலை பொறுத்து உங்கள் குடும்பத்தில் நடந்த வாய்மொழி பாகப்பிரிவினையில் 3மற்றும் 5அயிட்ட சொத்துக்கள் தான் எனது தகப்பனார் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் 5ம் அயிட்ட சொத்தை எனது தகப்பனார் வேறு நபர்களுக்கு கிரையம் பேசி முடித்தார் என்றால் சரியல்ல. இரு குடும்பமும் சேர்ந்து போய் தான் விற்று கிரையம்பேசி ரூபாயை பிரித்துக்கொண்டனர். முன் ஆவணங்கள் 2ம் பிரதிவாதியின் பெயரில் கிரையம் வாங்கப்பட்ட காரணத்தினால் மட்டுமே பிரதிவாதியின் குடும்பத்தினர் விற்பனை ஆவணத்தில் கையொப்பம் செய்தார்கள் என்றால் சரியல்ல. பிராது வழக்குரையில் 3ம் அயிட்ட சொத்தையும், 5ம் அயிட்ட சொத்தையும் 1ம் வாதிக்காக அவரது கணவரான

ராமசாமி நாடார் விவசாயம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் கூறியுள்ள மேற்சொன்ன சங்கதியை கூறிஇருந்தால் தவறு என்றால் சரிதான். எனது கூற்றின் படி தாவா சொத்து சிவசுப்பிரமணிய நாடார் நிர்வாகத்தில் இருந்து வந்தது என்றால் சரிதான். எனது தகப்பனார் வியாபாரம் செய்து வந்த காரணத்தினால் மேற்சொன்ன சிவசுப்பிரமணியன் நிர்வாகத்தில் இருந்து வந்தது. 1ம் அயிட்ட சொத்துக்கள் 1972 ம் ஆண்டே பிரிவினை செய்யப்பட்டு அனுபவம் செய்து வரப்பட்டது என்றால் சரியல்ல. 3ம் அயிட்ட சொத்து கிணறும், அதை சுற்றியுள்ள இடங்களும் 89 செண்ட் நாங்கள் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். 1,2 மற்றும்4,6 அயிட்ட சொத்துக்கள் கிணற்றின் அருகில் கிடையாது. அது தூரமாக உள்ளது. 3ம் அயிட்ட சொத்து கிணற்று அருகில் பாசான வசதி உள்ள நல்ல சொத்து என்ற காரணத்தினால் தான் மற்ற சொத்துக்கள் தூரமாக இருந்த காரணத்தினால் நயமிதம் பார்த்து பிரதிவாதிகள் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அருகில் வேறு சொத்துக்களை தனிப்பட்ட கிரையம் பெற்ற காரணத்தினால் அதனுடன் சேர்த்து அந்த சொத்துக்கள் அவருடைய அனுபவத்திற்கு விடப்பட்டது. எனது குடும்பத்திற்கும் பிரதிவாதிகளின் குடும்பத்திற்கும் எவ்வளவு நாட்களாக பேச்சுவார்தை கிடையாது என்றால் சிவகிரியில் வேற வழக்கு தொடர்ந்தில் இருந்து பேச்சுவார்த்தை கிடையாது. எனது தகப்பனார் அவருக்கு வரவேண்டிய சொத்துக்களை பொறுத்து எனக்கு உயில் எழுதி கொடுத்துள்ளார். மேற்படி உயிலில் எந்த சொத்து என குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன வா.சா–ஆ.9 உயில் ஆவணத்தில் கண்ட பி தபசில் சொத்தில் கூறப்பட்டுள்ள வரவேண்டிய சொத்து என்று கூறப்பட்டுள்ள சொத்து இதுவரை எங்களுக்கு கிடைக்கப்பெறவில்லை. வா.சா–ஆ.9 ன் படி உயிலின் கண்ட வாசகங்கள் ஊர்ஜிகத்திற்கு வரவில்லை என்றால் சரிதான். அதனால் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வா.சா–ஆ.9 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாசகங்கள் எனது தந்தையாராலும், என்னாலும், பிரதிவாதியின் சொத்தினை மோசம் செய்யும் நோக்கத்தில் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஆவணத்தில் பிரதிவாதிகளி' தரப்பினர்கள் அல்ல என்றாலும், அதனால் வா.சா–ஆ.9 ஆவணம் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தக்கூடியதில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ–18 உயில் ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் இந்த வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3ம் அயிட்ட சொத்தாகும். 3ம் அயிட்ட சொத்து தான் வா.சா.ஆ.18 ஆவணத்தில் 1வதுஅயிட்டமாக உள்ளது என்றால் சரிதான். வா.சா–ஆ.18 ல் 1வது அயிட்ட சொத்தில் பிரிவின்றி பாகம் என்று தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன பிரிவின்றி பாகத்தை தற்போது வரை பிரிக்கப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.18 ஆவணத்தின் படி பிரித்து தனிப்பட்ட முறையில் எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.18 ஆவணம் இன்றளவும் நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.9, 18 ஆவணங்கள் நடைமுறைக்கு சாத்தியமில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. அதனால் மேற்சொன்ன ஆவணங்கள் எந்த காலத்திலும் ஊர்ஜிகத்திற்கு வரப்போவதில்லை என்றால் சரியல்ல. வா.சா–ஆ.9, 18ன் படி உரிமைகோர உரிமையில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.18 ஆவணத்திலும் பிரதிவாதிகள் தரப்பினர்கள் கிடையாது என்றாலும், பிரதிவாதிகளை கட்டுப்படுத்தக்கூடியது கிடையாது என்றாலும் சரியல்ல. 2ம் பிரதிவாதியின் தகப்பனார் சிவசுப்பிரமணியன் என் மீது சிவகிரி நீதிமன்றத்தில் வழக்கு எண். 154/2011 தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன். மேற்சொன்ன வழக்கின் எதிர்வழக்குரையில் எவ்வளவு சொத்து 1ம் பிரதிவாதியிடம் அதிகமாக உள்ளது என்று கூறியுள்ளேன் என்றால் அதில் நான் சொத்து குறித்து காண்பிக்கவில்லை. மேற்சொன்ன எதிர்வழக்குரையில் 31 செண்ட் நிலம் அதிகமாக இருப்பதாக கூறியுள்ளேன் என்றால் அதுகுறித்து எனக்கு நினைவில்லை. மேற்படி வழக்கின் எதிர்வழக்குரை நகல் என்னிடம் இல்லை, மேற்படி எதிர்வழக்குரையின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் என்ன கூறியுள்ளேன் என்பது தெரியவரும் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது–**